24th March 1959]

SRI T. S. RAMASWAMY PILLAI : அங்கே ஹெட்மாஸ்டர்களுடைய கிரேடைக் குறைத்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அதைப் பற்றிய விவரங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கிரேட் ஒன்றும் குறைய வில்லை. எப்போதும் போல் செலக்ஷன் கிரேட், ஆர்டினரி கிரேட் என்று இரண்டு கிரேடுகள் இருக்கின்றன.

SRI K. SATTANATHA KARAYALAR : அங்கு இருக்கக்கூடிய பள்ளிகளில் சாதாரணமாக முதல் கிரேடு ஹெட்மாஸ்டர்களைத்தான் நியமிப் பார்கள். குறிப்பாக எஸ்.எல்.பி. பள்ளிக்கூடத்தில் இதுவரையில் முதல் கிரேடு ஹெட்மாஸ்டர் இருந்து இப்போது இல்லாமல் இருப்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether it is a fact that the number of gazetted headmasters' posts has been reduced after the integration?

THE HON. SRI C. SUBRAMANIAM : I want notice, Sir.

Indian National Awards for Teachers

* 982-B Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the method of selection that is followed for the Government of India National Award for Teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : The award is given to the best teacher under each of the two categories, Elementary and Secondary. The selection for the award is made at three stages. First, the District Committee, constituted for the purpose, with the District Educational Officer as Chairman and the headmaster of a training school and the headmaster of a secondary school as members, selects two teachers under each category and reports their names to the State Committee. The State Committee consisting of the Director of Public Instruction as Chairman and the Vice-Chancellor, Madras University, and the Principal, Teachers', Training College, Saidapet, as members, selects, from among the teachers recommended by the District Committees, three teachers under each category and reports their names to the State Government. The State Government forward the names to the Government of India, together with their recommendation. The Government of India then select one teacher under each category for the award.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த அவார்டு கொடுக்கப் படுவதின் காரணமாக அவர்களுக்கு உத்யோகத்துறையில் ஏதாவது சலுகை காட்டப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உத்யோகத்துறையில் சலுகைக் காட்டுவதற்காக கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் செய்யக்கூடிய சேவையை பாராட்டுவதற்காகத்தான் இந்த சிறப்புகள் வழங்கப்படுகின்றன.

SRI A. VEDARATHNAM : இந்த முறையில் யாருக்கு இந்த சிறப்புகள் வழங்கப்பட்டன ? அவர்களுக்கு அதற்கு என்னென்ன தகுதிகள் இருந்தன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டருக்கும், சென்னை திரு. வி. க. பள்ளிக்கூட ஆசிரியருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய தகுதிகள் இருந்ததினால்தான் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கின்றனர்.

SRI K. VINAYAKAM : Sir, does the Hon. Minister for Edu-
9 a.m. cation interview these selected teachers before submitting their names to the Government of India, so as to ensure the fool-proof *modus operandi* of the system that is effected in selecting these teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that, after so much of filtering, the Education Minister should take the responsibility of interviewing and judging them; it is best decided and judged by the Committee Members.

Opening of Junior Basic Schools

*982-C *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :

(அ) இந்திய சர்க்காரின் உதவியினால் சென்னை இராஜ்யத்திலிருக்கும் கிராமங்களிலே திறக்கப்படப்போகும் ஜூனியர் ஆதாரப்பள்ளிக்கூடங்களிலே கோயமுத்தூர் ஜில்லாவிலே ஒவ்வொரு தாலுக்காவிலும் எத்தனைப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும் ?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களின் செலவினங்களுக்காக எவ்வளவு தொகை 1959-ம் வருடத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no proposal to open Junior Basic Schools in Coimbatore District with the aid of the Government of India.

(*b*) Does not arise.

*982-D *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :

(அ) கல்வி கற்றவர்களிடையே வேலையில்லா கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகவும், குறிப்பாக மிகமிகப் பிற்போக்கான கிராமங்களிலே 900 ஜூனியர் ஆதாரப் பள்ளிக்கூடங்களை சென்னை இராஜ்யத்திலே நிறுவுவதற்காகவும் இந்திய சர்க்காரின் உதவியிலே கொண்டு வரப்பட்டிருக்கும் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களானது எப்போது நிறுவப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 7,44,500, Sir.

(*b*) It is hoped that these schools will be established before the end of the current financial year, i.e., 31st **March 1959.**

Evidently, the hon. Member is referring to the schools to be opened for relieving unemployment.